**தலைப்பு 196 – விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

தலைப்பு 196 – விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டணங்களுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. | பாதீட்டு மதிப்பீடு சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.9(அ) |
| | | 2. | பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை | 2.12 |
| **127(1)**(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வேண்டும். | 1. | இணங்காமைகள் | 13 |
| | | 2. | மனிதவள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 14 |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | 1. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை | 2.3.1(ஆ) |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக்கொள்ளாமை | 2.3.2(இ) |
| | | 3. | சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரத்திலுள்ள குறைவு | 2.5(அ)(இ) |
| | | 4. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.9(ஆ)i |
| | | 2. | மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.9(ஆ)ii |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | 1. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்கணக் கணக்கில் குறைபாடுகள் | 2.10 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் | | நிதியுடன் தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்ளப்படாமை | 2.15 |

நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / மிகைக் கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2 போதியளவு மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

முக்கிய செயற்பாடுகளால் எதிர்பார்க்கப்பட்டதும் ஆனால் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாததுமான 08 பாதீட்டு பிரேரணைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு ரூபா 1,350 மில்லியன் தொகையானதுடன் அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூபா 440.43 மில்லியனாகும். அதில் 03 முக்கிய நடவடிக்கைகளுடன் தொடர்பான ரூபா 575 மில்லியன் மொத்த ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.1.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் நடைமுறை ஆண்டில் 13 முக்கிய செயற்பாடுகள் செயற்படுத்த வேண்டியிருந்தது. இருந்தபோதிலும், பின்வரும் 03 முக்கிய செயற்பாடுகள் பெறுகைத்திட்டங்களின் பிரகாரம் செயற்படுத்த முடிந்திருக்காமையால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 575 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்படல் சேமிக்கப்பட்டிருந்தது.

| | செயற்படுத்தப்படாத முக்கிய நடவடிக்கை | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு |
|---|---|---|
| | | (ரூபா மில்லியன்) |
| (i) | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தர உறுதிப்பாடு | 25 |
| (ii) | அபிவிருத்தி உதவியின் கீழுள்ள உற்பத்தி வடிவமைப்பு பொறியியல் சேவையின் ஸ்தாபிப்பு | 500 |
| (iii) | மரபியல் விஞ்ஞாபனத்தின் சிறப்பிற்கான நிலையத்தினை உருவாக்கல் | 50 |
| | | 575 |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெறாமை**

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 9.255 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் இந்து - இலங்கை ஒருங்கிணைந்த ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், செயலாற்றல் குறிகாட்டிகள் அத்தகைய செயற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டவாறு அடையப்பட்டிருந்ததா என நிரூபிக்க முடிந்திருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை அடையாமை**

2017 ஆம் ஆண்டில் சோலர் பனல் மாதிரி உற்பத்தியை செயற்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 20 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பெறுகைகள் திட்டமிட்டவாறு மேற்கொள்ளாமையால் ரூபா 17.94 மில்லியன் சேமிப்பைக் காட்டியது.

**(ஈ) நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான திட்டங்களினை தயாரித்தல்**

தாவரங்களை தயாரித்தல் செய்முறை மற்றும் இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக தயார்படுத்தல் என்பன நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைதலை தயார்படுத்தலில் ஏனைய நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பின்மையால் மந்தமான மட்டத்திலிருந்தது.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) அரசாங்கத்தால் சொந்தமாக்கப்பட்ட சொத்துக்களை அதிகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்தாமை

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளிற்கிடையிலான தொடர்பாடல் முறைக்காக உள்ளக தொலைபேசி முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் தகவல்கள் நேரடி தொலைபேசி இணைப்புக்களின் மூலம் பரிமாற்றப்படாமையால் தொடர்பாடல் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) மோட்டார் வாகனங்களின் பயன்பாடு

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓடுவதற்காக பதினைந்து வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டதும் அந்த வாகனங்களிலிருந்து 138,950 கிலோமீற்றர் ஓடப்பட்டிருந்ததுடன் அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்க்கான வாகன மெருகூட்டலிற்காக ரூபா 7,669,910 தொகையும், மெருகூட்டல் மற்றும் வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 4,599,230 தொகையும் மற்றும் லோடர் வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக ரூபா 1,027,468 தொகையுமாக செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 55.21 தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | வாகனங்களின் வகை | வாகன எண்ணிக்கை | பெறுமதி | சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஏனைய செலவினம் | ஓடிய கிலோமீற்றர் எண்ணிக்கை | ஓடிய கிலோமீற்றர் ஒன்றுக்கான செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | | |
| 1. | வேன் | 06 | 44,345,000 | 3,509,40 | 67,156 | 52.25 |
| 2. | மோட்டார் கார் | 06 | 33,862,500 | 12,649,226 | 44,848 | 59.07 |
| 3. | ஜீப் | 01 | 23,000,000 | 836,255 | 22,600 | 37.00 |
| 4. | டபிள் கப் | 02 | 11,000,000 | 675,428 | 4,326 | 156.13 |

02 வான்கள், 04 மோட்டார் கார்கள் மற்றும் 01 டபிள் கப்பிற்காக மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு சொந்தமான நான்கு மோட்டார் வாகனங்கள் 02 ஆண்டுகளிற்கு மேலாக பிளனேறறியம் இடங்களில் அவற்றை பயன்படுத்துவதற்கோ நிறுத்தபடியிருந்ததுடன் அவற்றை பயன்படுத்துவதற்கோ விற்பதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மர அடுப்பு, தேங்காய் எண்ணெய் பிரித்தெடுப்பு, யோக்கர் இன்குவேரர் மற்றும் கோவிஹனே, மல்லாவபிற்றன, மஸ்போத மற்றும் பண்டுவஸ்நுவரவிலுள்ள விதாத நிலையங்கள் பயன்படுத்தாமல் விளைவற்றிருந்தது அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டது.

**(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மெய்மையாய்வு சபையானது நடாத்தப்பட்டு அதற்கான அறிக்கை சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் 3.1.6 மற்றும் 3.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 யூன் 15 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும், 120 விதாத நிலையங்கள் தொடர்பிலான அறிக்கைக் அமைச்சால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2018 யூலை 31 அளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(ii) மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பில் எடுக்கப்படாத நிதிப்பிரமாணத்தின் பிரகாரமான நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் அறிக்கைகள் மூலம் காட்டப்பட்டிருந்தது.

**(உ) வெளித்தரப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 9.39 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனத்தின் முறையற்ற விடுவிப்பானது சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய பராம்பரிய அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பாதீட்டின் எல்லையை மிகைத்து கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

அமைச்சால் ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவினம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் மிகைத்திருக்காத போதிலும், 06 செலவின விடயங்கள் தொடர்பில் ரூபா 1,556.976 ஏற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சால் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 64,367,010 ஆகவிருந்தது.

**2.4 நட்டங்களும் சேதங்களும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சரின் அலுவலக கனடா சுற்றுலாவொன்று பிற்போடப்பட்ட வேண்டியிருந்தமையால் விமான பற்றுச்சீட்டுகளிற்காக செலுத்தப்பட்ட ரூபா 145,100 தொகை அறவிட முடியாதிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிலிருந்து வேலையை விட்டுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு குறைந்த விகிதத்தில் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் சந்தைப் பெறுமதி ரூபா 289,840 தொகையை அறவிடுவதற்கோ அல்லது அந்த மோட்டார் வாகனங்களை அமைச்சிற்கு எதிராக வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) மல்லாவப்பிற்றிய, நிடாஹம, மஸ்வத்த, பாண்டுவஸ்நுவர கிழக்கு மற்றும் பொலகஹவெலவிலுள்ள விவாத நிலையங்களின் பராமரிப்பிற்காக குத்தகை வாடகையாக ரூபா 782,400 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தகைய நிலையங்களுக்கு தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் வழங்கப்படாமையில் எதிர்பார்க்கப்பட்ட சேவைகளை நலனாளிகளால் பெறப்பட முடிந்திருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 23 இலிருந்து ரிதிஹம விதாத நிலையத்திற்கு அமைச்சால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ருக்காததுடன் கள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் மாத்திரம் நிலையத்திற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அதனால், எந்தவொரு சேவையும் 2015 ஆம் ஆண்டிற்கு பின்னர் நிலையத்தால் வழங்கப்பட்டிருக்காததுடன் அத்தகைய இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் சம்பளங்களாக கொடுக்கப்பட்ட ரூபா 1,074,221 மொத்ததொகை சிக்கனமற்ற செலவீனமாகியிருந்தது.

**2.6 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 1,293 | 1,111.54 | 181.46 | 14.03 |
| | மூலதனம் | 2,474.16 | 1,836.40 | 637.76 | 25.77 |
| | **மொத்தம்** | **3,767.16** | **2,947.95** | **819.21** | **21.75** |
| 2014 | மீண்டெழுபவை | 1,396.13 | 1,285.91 | 110.22 | 7.89 |
| | மூலதனம் | 2,520.97 | 2,369.91 | 151.06 | 5.99 |
| | **மொத்தம்** | **3,917.09** | **3,655.81** | **261.28** | **6.67** |
| 2015 | மீண்டெழுபவை | 1,500.35 | 1,425.78 | 74.57 | 4.97 |
| | மூலதனம் | 2,256.55 | 1,722.35 | 534.2 | 23.67 |
| | **மொத்தம்** | **3,756.9** | **3,148.13** | **608.77** | **16.20** |
| 2016 | மீண்டெழுபவை | 1,711.51 | 1,600.21 | 111.3 | 0.50 |
| | மூலதனம் | 2,366.74 | 1,694.04 | 672.7 | 28.42 |
| | **மொத்தம்** | **4,078.25** | **3,294.25** | **784** | **19.22** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டெழுபவை | 1,843.36 | 1,721.90 | 121.46 | 6.59 |
| | மூலதனம் | 3,931.10 | 1,912.67 | 2,018.43 | 51.34 |
| | **மொத்தம்** | **5,774.46** | **3,634.57** | **2,139.89** | **37.06** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் போதாமை**

மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளிற்காக ரூபா 3.3 மில்லியன் பெறுமதியான மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சொல்லப்பட்ட மதிப்பீடுகளில் குறித்துக்காட்டப்பட்ட ஏற்பாடுகளிற்கு பதிலாக ரூபா 960,000 தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அத்தகைய நடவடிக்கைகளை செயற்படுத்த முடிந்திருக்கவில்லை. ஆகையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 960,000 மொத்த ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) பிரேரிக்கப்பட்ட நேரவரையறையை கருத்திற்கொள்ளாமல் செயற்பாடுகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள்**

கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும் மென்பொருள் அபிவிருத்திக்காகவும் அமைச்சால் ரூபா 27 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முழு ஏற்பாடும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பெறுகை செய்முறை தொடர்பிலான சாத்தியமான கற்கைகள் மற்றும் நடவடிக்கைகளின் காலதாமதத்தால் பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

**(iii) மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

ரூபா 591.41 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் 15 செலவினங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முழு தேறிய ஏற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

**(iv) மிகை ஏற்பாடுகள்**

ரூபா 1,679.87 மில்லியன் தொகையான மிகை ஏற்பாடு 18 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 460.68 கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்கள் உரிய செலவின விடயங்களின் தேறிய ஏற்பாடுகளின் 54 சதவீதத்திலிருந்து 99 சதவீதவரையிலான வீச்சிலிருந்தது.

## 2.7 இணங்காமைகள்

### 2.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு தெரிவு செய்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள மற்றம் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| அத்தியாயம் XII இன் 1.7 ஆம் பிரிவு | வழங்கப்பட்ட விடுமுறையின் பதிவேடு பொது 190 இல் பேணப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தகைய பதிவேடு பண்டவஸநுவர மற்றும் கோபிஹனவிலுள்ள விதவா நிலையங்களில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 751 | அமைச்சிற்கு கிடைத்த இருப்புப் பொருட்களை பதிவு செய்யாமை |
| நிதிப்பிரமாணம் 891(1) | பாதுகாப்பை கொடுப்பதற்கு வேண்டப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் பாதுகாப்பு பதிவேட்மை பராமரிக்காமை. |

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பாக அமைச்சு கணக்காய்விற்குச் சமர்ப்பித்த விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 485 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க மூலதன செலவினம் ரூபா 530,634 தொகையாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 20 | 3 |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 3 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 741 | 657 | 84 |
| (iv) | ஆரம்ப நிலை | 234 | 230 | 4 |
| (v) | அமைய / ஒப்பந்த | 4 | 4 | - |
| | மொத்தம் | 1031 | 914 | 117 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சிய ஆட்சேர்ப்பு**

---

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமானது அமைய மற்றும் விடுதலை அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட 80 பாதுகாவலர்களின் இரண்டு பதவிகளிற்காக மாத்திரம் அமைச்சால் பெறப்பட்டிருந்தது. தற்போது அமைச்சின் சேவைக்காக 77 உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்ட போதிலும் அத்தகைய பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மனித வளங்கள்**

---

கொபிஹனவிலுள்ள விதவா நிலையங்களிற்கு கணனி தரவு பதிவு செயற்பாட்டாளரொருவர் அமர்த்தப்பட்டிருந்தனர். எனினும், விதவா நிலையத்தில் கணனிபயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான தேவையான கணனிகள் மெருகூட்டப்படாமல் இருந்தது. இதனால் கணனி தரவு பதிவு செயற்பாட்டாளரின் சேவை விளைவற்றிருந்தது.

**(இ) ஏனைய வெளித்தரப்பினர்களிடமிருந்தான முறையற்ற ரீதியல் பெறப்பட்ட மனிதவளங்கள்**

---

கல்வி அமைச்சின் உத்தியோகத்தரொருவர் 2016 மார்ச் 08 இலிருந்து சங்கத்தின் உதவி செயலாளர் பதவிக்காக அமைச்சால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சொல்லப்பட்ட உத்தியோகத்தரொருவரை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பதவியணியினருக்குப் பயிற்சியளித்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் உத்தியோகத்தரொருவரிற்காக 2013 இலிருந்து 2017 வரையான 05 ஆண்டு காலப்பகுதியிலுள்ள நடாத்தப்பட்ட பயிற்சிகளின் மீளாய்வில் 2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டில் 366 நபர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 287 நபர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். இதற்கு மேலதிகமாக 76 நபர்கள் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டத்திலும் பங்குபற்றியிருக்கவில்லை.

(iii) ரூபா 4,552,436 தொகையான தேறிய ஏற்பாடு 2017 ஆம் ஆண்டில் பதவியணிக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஒரு உத்தியோகத்தருக்காக ரூபா 15,862 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2.9 பொது உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு

----------------------------------------------------------------------

நிர்வாகத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது நம்பிக்கைக்குரியதாக பகிர்ந்தளிக்கப்பட்ட பொதுமக்கள் பணத்தினை பெறுதல் அல்லது பாதுகாத்தல், வருமான முத்திரைகள் அல்லது களஞ்சியங்கள் அல்லது பொது பணத்தினை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரைகளை வழங்கல் அல்லது களஞ்சியங்களிற்கு பொறுப்பாகவுள்ளோர், மற்றும் பற்றுச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்துவோர் அல்லது அரச கணக்கு தொடர்பாக காசோலைகளை வரைதல் பொது உத்தியோகத்தர்கள் (பாதுகாப்பு) கட்டளை (கப் 612) மற்றும் நிதிப்பிரமாணம் போன்றவற்றின் பிரகாரம் அவர்களுடைய நேர்மையான கடமைகளை உறுதிப்படுத்துவதற்கு பிணைகளை கொடுப்பதற்கு வேண்டியிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட கடமைகளில் ஈடுபட்டுள்ள அமைச்சின் உத்தியோகத்தர்கள் பிணைகளை கொடுத்திருக்கவில்லை.